නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන,
පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යාංශය
மாநில திறன் மேம்பாடு, தொழிற்கல்வி,
ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் அமைச்சகம்
State Ministry of Skills Development,
Vocational Education, Research & Innovations

ජාතික ආධුනිකත්ව සහ කාර්මික පුහුණු කිරීම් අධිකාරිය
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
National Apprentice & Industrial Training Authority

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT

# 2020



971. ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, වැලිකඩ, රාජගිරිය.
971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,வெலிக்கடை, இராஜகிரிய.
971, Sri Jayawardanapura Mawatha, Welikada, Rajagiriya

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

# வருடாந்த அறிக்கை
# 2020

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தலைவரின் செய்தி | 01 - 02 |
| முகவுரை | 03 |
| வரலாறு | 04 - 05 |
| அறிமுகம் | 06 - 07 |
| தூர நோக்கும் பணிக்கூற்றும் | 08 |
| 2020..... | 09 - 13 |
| 1. நிறுவன தகவல்கள் | 14 - 15 |
| 2. நிர்வாகக் குழு | 16 |
| 3. பணிப்பாளர் சபை உத்தியோகத்தர்கள் | 17 |
| 4. மாவட்ட முகாமையாளர்கள | 18 |
| 5. நிர்வாகக் கட்டமைப்பு | 19 |
| 6. அதிகார சபையின் நோக்கம் | 20 |
| 7. அதிகார சபையின் பிரதான செயற்பாடுகள் | 20 |
| 8. பயிற்சி முறை மற்றும் ஏனைய பிரதான வேலைத்திட்டங்கள் | 21 - 25 |
| 9. தரவு விபரிப்பும் பகுப்பாய்வும் | 26 - 60 |
| 10. ஏனைய செயற்பாடுகள் | 61 - 69 |
| 11. இறுதி கணக்கறிக்கை | 70 - 78 |
| 12. தணிக்கையாளர் நாயகத்தின் அறிக்கை | 79 - 89 |

## தலைவரின் செய்தி..........



தேசத்தின் சிறார்களை தொழில் ரீதியில் திறமை நிறைந்தவர்களாக உருவாக்குவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய பயிலுநர் சபை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையாக மேலும் தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் விஸ்தரித்து 2020 ஆம் ஆண்டாகும் போது வெற்றிகரமாக 49 வருடங்களை கடந்து இலங்கை சமூகத்திற்கு தொழிற்பயிற்சியை வழங்கும் பொருட்டு தனது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றது.

2020 ஆம் ஆண்டில் நாட்டில் கொவிட் 19 பெருந்தொற்று அச்சுறுத்தல் நிலவிய சந்தர்ப்பத்திலும் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி, சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து எமது நிறுவனத்தின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு எம்மால் முடிந்தது.

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ள தொனிப்பொருளுக்கு அமைவாக 2021-2024 வரையான காலப்பகுதிக்காக கூட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு “You Lead” கருத்திட்டத்தின் அனுசரணையில் நிறுவனத்தின் பணிப்பாளர் குழு, பிரதான அலுவலகத்தின் பணிக்குழு, தேசிய நிறுவனங்கள் மற்றும் மாவட்ட பணிக்குழுக்களின் பிரதிநிதிகள், பேராசிரியர் ரஞ்சித் பண்டார அவர்களின் பிரதான ஒத்துழைப்புடன் வருடத்தின் ஆரம்பத்தில் ஆண்டின் பிரதான பணியாக மேற்கொள்ளப்பட்டது. அது மட்டுமன்றி சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் படி வருமானம் குறைந்த 100,000 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன் பல்நோக்கு அபிவிருத்திப் பணிக்குழு திணைக்களத்தின் ஊடாக தொழிற் பயிற்சியை வழங்கும் சிறந்த பணியை நிறைவேற்றுவதன் முதலாவது கட்டம் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அவ்வாறே கட்டுநாயக்க பொறியியல் தொழினுட்ப நிறுவனத்தில் தற்போதுள்ள பயிற்றுவிக்கும் திறனை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு ஆஸ்திரியா இலகு கடன் நிதியத்தின் கீழ் (Soft Loan Fund) பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டமானது 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் ஒரு சிறப்பான செயற்பாடாக 100,000 வேலைவாய்ப்பு கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கு புதிய தகவல் முறைமையை (MIS) அறிமுகப்படுத்தலும், பிரதான ஆய்வாளர்களுக்கு அது தொடர்பான அறிமுக நிகழ்ச்சித்திட்டமும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக இவ்வாண்டில் CIDA நிறுவனத்துடன் இணைந்து ‘ஷில்ப சவிய’ நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் கொத்தனார், தச்சு மற்றும் தொழினுட்பவியல் துறைகளில் 6000 இற்கு அண்மித்த திறமையான கைவினைஞர்களை உருவாக்குவதற்கும், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையுடன் இணைந்து சூரியவலு முறைமையை ஸ்தாபித்தலையும் பேணுவதையும் மேற்கொள்ளும் தொழினுட்ப கைவினைஞர்களுக்காக மட்டம் NVQ 4 பாடநெறியை நடாத்துவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதும், கெப்பிடல் மஹாராஜா நிறுவனத்துடன் இணைந்து நீர்க்குழாய் கைத்தொழில் வினைஞர், பொருத்துனர் மற்றும் அலுமினிய

தயாரிப்பாளர் ஆகிய துறைகளின் ஊடாக திறமையான இளைஞர்களை உருவாக்கும் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையும் எனது தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தடைகள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுத்தவாறு நிறுவனத்தின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்பு செய்த பணிக்குழுவுக்கும் பயிலுநர்களுக்கு பயிற்சியை வழங்குவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அரச மற்றும் தனியார் துறைகளின் நிறுவனங்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தரங்க நளீன் கம்லத்

தலைவர்

## நூன்முகம்

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் ஆண்டறிக்கை தயாரிக்க வேண்டியுள்ளது.

இந்த அறிக்கையில் 03 பாகங்கள் உள்ளடங்குகின்றன. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான விபரங்கள், பயிற்சி குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஆண்டின் சுருக்கமான வருடாந்த கணக்கு அறிக்கையும் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள தகவல்களை உள்ளடக்கியும் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையானது நாடுபூராகவும் இயங்கும் 25 மாவட்ட அலுவலகங்களின் முகாமையாளர்கள் மற்றும் தேசிய நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்கள் அத்துடன் பிரதான அலுவலகத்தில் அந்தந்த பிரிவுகளின் தலைவர்களினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்து சுருக்கமான முறையில் இவ்வறிக்கையானது தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

2020

## வரலாறு

1. இற்றைக்கு ஏறத்தாழ 49 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் ஏற்பட்ட இளைஞர்களுடைய அதிருப்திக்குத் தீர்வாக அரச தலையீட்டுடன் 1971 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க தேசிய பயிலுநர் சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் சபை நிறுவப்பட்டது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் உலக தொழிலாளர் சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் பயிலுநர் பயிற்சி தொடர்பான பாடத்திட்ட அபிவிருத்தி, பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான தரநிர்ணயம், தொலைக்கல்விக்கான வழிகாட்டல்களைத் தயார் செய்தல், தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் வழங்குதல் போன்ற பல்வேறு வெற்றிகள் தேசிய பயிலுநர் சபையின் கீழ் அடையப் பெற்றுள்ளன.

2. 1983 ஆம் ஆண்டில் முதலாவது தேசிய பயிற்சி நிறுவனமாக பயிலுநர் பயிற்சி நிறுவகம் ஜேர்மன் கூட்டாட்சி குடியரசின் உதவியுடன் இல. 581, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ எனும் இடத்தில் நிறுவப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் இரண்டாவது தேசிய பயிற்சி நிறுவனம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் உலக தொழிலாளர் சம்மேளனத்துடன் ஒன்றிணைந்து தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் எனும் பெயரில் 18 ஆம் மைல்கல், பன்சலை வீதி, கட்டுநாயக்க எனும் இடத்தில் நிறுவப்பட்டது.

3. 1989 ஆம் ஆண்டில் மூன்றாவது தேசிய பயிற்சி நிறுவனமாக ஜப்பான் நாட்டின் உதவியுடன் மோட்டார் வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவனம் இல. 07, வைத்தியர் ரெனிஸ்டர் த சில்வா மாவத்தை, ஒருகொடவத்தை, வெல்லம்பிட்டிய எனும் இடத்தில் நிறுவப்பட்டது.

4. நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் II ஆம் பிரிவின் கீழ் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாக ஸ்தாபிக்கப்பட்டது.

5. அதன்பின்னர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் நிர்வாகம் மாகாண அலுவலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளதோடு, மேலும் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கூட்டு அலுவலகங்களுக்கு ஒழுங்கு முறையாக விரிவுபடுத்தப்படும்.

6. மூன்றாம் நிலைக் கல்விச் சட்டமூலத்தின் படி பொறியியற் பட்டக் கற்கை நிறுவனம் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனம் ஊடாக நடாத்திச் செல்லப்படும் உயர் டிப்ளோமாவுக்குத் தேவையான இயந்திரவியல் பயிற்சி வழங்கப்படுகின்றது.

7. நான்காவது தேசிய பயிற்சி நிறுவனமானது ஜேர்மன் கூட்டாட்சி குடியரசு GIZ மற்றும் KFW நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் கிளிநொச்சியில் ஆரம்பிப்பதற்கு 2014 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 04 ஆந் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது.

8. 2014 ஆம் ஆண்டு முதல் ஏனைய தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நிறுவனப் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு அதிகாரசபையினூடாக ஆறு மாத கால வேலையுடனான பயிற்சி வழங்கப்படுகின்றது. விசேடமாக கைத்தொழிற் பல்கலைக்கழகம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட / தனியார் நிறுவனங்களில் தொழிற் பயிற்சித் துறையில் பயிற்சி பெறுவோருக்கு கைத்தொழிற் பிரிவில் பிரயோகப் பயிற்சியினை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென இப் பயிற்சியானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

9. நான்காவது தேசிய பயிற்சி நிறுவனமாக இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி திறந்து ஆரம்பிக்கப்பட்டதோடு, அது ஜேர்மனி அரசின் தேவைப்பாட்டிற்கமைய தனியான நிறுவனமொன்றாக நடாத்திச்

செல்வதற்காக 2020.01.01 ஆந் திகதியிலிருந்து சபையின் நிர்வகிப்பிலிருந்து விலகி இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது.

10. சபையானது காலத்துக்குக் காலம் பல்வேறு கருத்திட்டங்களுடன் இணைந்து காலவரிசையின் படி பயிற்சி நடவடிக்கைகளை விருத்தி செய்யும் பொருட்டு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும், அந் நடவடிக்கைகள் நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் பிரயோகிக்கப்படுகின்றது.

11. நிறுவனத்தின் சகல பயிற்சி செயற்பாடுகளும் அதனுடன் சம்பந்தப்பட்ட சகல தகவல்களும் கணனிமயப்படுத்தி 2019 அம் ஆண்டில் பயிற்சி கண்காணிப்பு முறைமையானது (T.M.S. – Training Monitoring System) ஸ்தாபிக்கப்பட்டது.

12. நடைமுறையில் 13 ஆண்டுகள் தொடர் கல்வியை வழங்குவதன் மூலம் கல்வி அமைச்சுடன் ஒன்றிணைந்து க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடையாத பிள்ளைகளுக்காக தேசிய தொழிற் தகைமை நான்காம் மட்டத்தை (IV) வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டிலிருந்து இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

13. கட்டுநாயக்க தொழில்நுட்ப இயந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனம் 1985 ஆம் ஆண்டில் 250 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் திறன் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டதோடு, ஆஸ்திரியா இலகு கடன் நிதியின் (Soft Loan Fund) கீழ் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டமென்பதால், 2020 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 500 ஆக உயர்த்தப்பட்டது.

# அறிமுகம்

## சட்ட கட்டமைப்பு

1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய பயிலுநர் சபையாக ஆரம்பிக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாக நிறுவப்பட்டது.

தனது கருமங்களைச் செவ்வனே நிறைவேற்றிய பெருமையுடன் 49 ஆவது வருடத்தினைக் கடந்த நாம் 1971 முதல் 2020 ஆம் ஆண்டு வரை தொழிற் பயிற்சி வழங்கும் துறையில் பயணித்த பயணத்திற்கு அதிக வலுவூட்டிய உறுப்பினர்கள் தொடர்பாகவும் சற்று குறிப்பிட விரும்புகின்றோம்.

1. **பயிற்சிப் பிரிவு**

   ஆட்சேர்ப்புப் பிரிவு, பயிற்சிப் பிரிவு, இயந்திரவியல் பயிற்சிப் பிரிவு, தொழில் வழிகாட்டல் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் கூடிய பயிற்சிப் பிரிவானது 25 மாவட்டங்கள் ஊடாக முழு இலங்கைக்கும் பயிற்சி நடவடிக்கைகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல், தொடர்புபடுத்தல் மற்றும் பேணுதல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு சக்தியளித்து வருகின்றது.

2. **தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு**

   பாடத்திட்ட அபிவிருத்திப் பிரிவு, தர முகாமைத்துவ பிரிவு, தேசிய தொழிற் பரீட்சைப் பிரிவு, தேசிய தொழிற் தகைமைப் பிரிவு, மதிப்பீட்டுப் பிரிவு, சான்றிதழ் பிரிவு ஆகிய பிரதான பிரிவுகளுடன் கூடிய தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் பயிற்சி நடவடிக்கைகளை மிகவும் முறையாகவும் செயற்றிறனுடனும் நடாத்துவதற்குத் தேவையான வளங்களை அபிவிருத்தி செய்து, பயிலுநர்களினதும் நிறுவனத்தினதும் தரத்தினை விருத்தி செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை வழங்கி அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பாரிய சக்தியை வழங்குகின்றது.

3. **திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பிரிவு**

   சகல மாவட்ட அலுவலகங்கள், தேசிய நிறுவனங்கள், நிர்வாகம், தரக்கட்டுப்பாடு, நிதி மற்றும் பயிற்சி ஆகிய சகல பிரிவுகளையும் உள்ளடக்கி அவர்களது முன்னேற்றத்தை தரவு முகாமைத்துவ செயன்முறை மற்றும் தேவைக்கேற்றவாறு ஏனைய அறிக்கைகளைத் தயாரித்து நிரல் அமைச்சு உள்ளடங்கலாக ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கேற்றவாறு தகவல்களை வழங்கி தேசிய பயிலுநர் தொழிற் பயிற்சி அதிகாரசபையானது, வெளிச்சூழலுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

   மேலும், அதிகாரசபையின் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக தேவையான ஒருங்கிணைந்த திட்டம், செயற்பாட்டுத் திட்டம் மற்றும் தேவைக்கேற்றவாறு பல வழிகளில் திட்டங்களை மேற்கொள்ளல் ஆகியன பிரதான பொறுப்பாகும். அதேபோன்று அதிகாரசபையின் பயிற்சி மற்றும் பயிற்சி தொடர்பான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு இப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. மேலும் பயிற்சிக்கான சகல தகவல்களையும், பணியாளர்களின் தகவல்களையும் ஒன்றிணைப்பதற்கான முகாமைத்துவ தகவல் முறைமையை தயாரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்ற செயற்பாடுகள் இப் பிரிவின் பிரதான வகிபாகமாகும்.

### 4. நிர்வாகப் பிரிவு

அலுவலர்களை ஆட்சேர்த்தல் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு பிரிவு, சட்டப் பிரிவு, அலுவலர் பயிற்சிப் பிரிவு ஆகிய பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதுடன், ஆளணி மற்றும் ஏனைய பௌதீக வளங்களை வினைத்திறனுடன் நிர்வாகம் செய்தல் மற்றும் பயன்படுத்தல் மூலமாக நிறுவனத்தின் எதிர்காலப் பயணத்திற்கு பரந்த வலுவூட்டலை அளிக்கின்றது.

### 5. நிதிப் பிரிவு

பெறுகைகள் பிரிவு, களஞ்சியப் பிரிவு, கொடுப்பனவுப் பிரிவு, சம்பளப் பிரிவு மற்றும் கணக்கு வைத்தல் பிரிவு ஆகிய பிரதான பிரிவுகளை உள்ளடக்குவதுடன், வருடாந்த திட்டமிடல் பிரிவின் மூலம் தயாரிக்கப்படும் செயற்பாட்டு மற்றும் கூட்டுத் திட்டத்தின் படி தயாரிக்கப்படும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினை முறையாக செயற்படுத்தி நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் நேரடித் இணைப்பொன்றை சேர்ப்பதற்குப் பிரதான பங்களிப்பை வகிக்கின்றது.

### 6. கணக்காய்வுப் பிரிவு

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு கணக்காய்வுத் திணைக்களம், நிரல் அமைச்சு உள்ளடங்களாக ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. உள்ளக நிர்வாகம் மற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகளின் வெளிப்பாட்டுத் தன்மையை முறையாக பராமரிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபையை ஒருங்கிணைத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு வேண்டிய தகவல்களை வழங்குவதுடனான பாரிய கருமமொன்றை நிறைவேற்றுகின்றது.

## செயற்பாட்டு வழிமுறை

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கு உள்ள தத்துவங்களின் படி அச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்கங் கொண்ட பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குறிக்கோள்களின் உச்சத்தை அடைந்து கொள்வதற்காக சபையானது தமது செயற்பாட்டு வழிமுறையை நடைமுறைப்படுத்துகின்றது.

இதற்காக பயிற்சி என்ற கருப்பொருளுக்கமைய 04 தேசிய நிறுவனங்கள், 25 மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி தொடர்பான நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் தனியார் துறைகளின் உதவியுடன் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி வழங்கப்படுகின்றது.

பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு, கண்காணிப்பு, மேற்பார்வை, சான்றிதழ் அளிப்பு போன்ற பல்வேறு பிரிவுகளின் கீழ் நேரடியாக பயிற்சி செயற்பாட்டு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், ஊழியர் பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, நிதி மற்றும் கணக்காய்வு ஆகியனவும் உள்ளடங்கும்.

# எமது நோக்கு

**மனித வள அபிவிருத்தியின் ஊடாக, இலங்கை செழுமையை அடைவதற்கு, தாக்கமுள்ள பங்களிப்பினைச் செய்து அதி திறன் பயிற்சியினை வழங்கும் அமைப்பாக உருபெறுதல்.**

# எமது ஏற்புப் பணி

**கைத்தொழிற் துறையிலான தேர்ச்சி பெற்ற மனிதவலுத் தேவைக்கு முகம் கொடுக்கும் வகையில், உயர்ந்த தொழிற்சார் நியமங்களுடனான, நன்றே உருவாக்கப்பட்ட தேர்ச்சிகளை தன்னகத்தே கொள்வதற்காய், இளம் பராயத்தினருக்கு வாழ்தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல்.**

**2020..........**

| | |
|---|---|
| கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி | 10,807 |
| வேலையுடனான பயிற்சி | 8,064 |
| விசேட கைத்தொழில் பயிற்சி | 3,962 |
| நிலைய மைய பயிலுநர் பயிற்சி | 2,841 |
| நிலைய மைய பயிலுநர் பயிற்சி (பகுதி நேர) | 559 |

அரை நூற்றாண்டு காலத்தை அண்மித்து 49 வருடங்களாக அபிமானமிக்க செயற்பணியுடன் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையானது 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 பெருந்தொற்று நாடுபூராகவும் பரவியிருந்த சந்தர்ப்பத்தில் அவ் அச்சுறுத்தலை வெற்றிகரமாக எதிர்கொண்டு அதிமேதகு சனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக குறைந்த வருமானம் பெறும் 100,000 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தரும் நோக்குடன் பல்நோக்கு அபிவிருத்திப் பணிக்குழு திணைக்களத்துடன் இணைந்து தொழிற் பயிற்சி பணியை வழங்கியமை 2020 ஆம் ஆண்டில் எம்மால் நிறைவேற்றப்பட்ட சிறந்த பணியாகக் குறிப்பிடலாம்.

2020 ஆம் ஆண்டின் பணிகள் சம்பிரதாயபூர்வமாக அரச சத்தியப் பிரமாணத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோடு, ஆண்டின் தொடக்கத்தில் தலைவரின் தலைமையில் கட்டுபெத்த கைத்தொழில் இயந்திரவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் ஒருகொடவத்தை மோட்டார் வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவனத்தின் முதலாவது மாணவர் குழுவை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

13 வருடங்கள் கல்வி முறை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான வேலைப்பயிற்சியை வழங்கும் முறை தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று தலைவர், பிரதி தலைவர், அனைத்து பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், மாவட்ட முகாமையாளர்கள், கல்வி அமைச்சின் பிரதிநிதிகள், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் அரச மற்றும் தனியார் துறையில் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.



கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தற்போது நிலவும் பயிற்சியளிக்கும் கொள்திறனை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு ஆஸ்திரியாவின் இலகு கடன் நிதியத்தின் (Soft Loan Fund) கீழ் பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டமானது 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையுடன் (SLSEA) இணைந்து தலைவரின் தலைமையில் சூரியவலு முறைமையை ஸ்தாபித்தல் மற்றும் பேணுதல் தொழினுட்பவியலாளர்களுக்காக (Solar Proteolytic Technician) மட்டம் NVQ 4 பாடநெறியை

நடாத்துவதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடும் நிகழ்வு நடைபெற்றது. 2021-2024 வரையான காலப்பகுதிக்காக கூட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை தொடங்குவதற்கு விசேடமான கலந்துரையாடல் நிறுவன வளாகத்தில் தலைவர் உட்பட பணிப்பாளர் சபையின் தலைமையில் நடைபெற்றது.



“You Lead” கருத்திட்டத்தின் அனுசரணையுடன் 2021-2024 வரையான காலப்பகுதிக்காக கூட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக மூன்று நாள் வேலைத்திட்டமொன்று வத்தளை பெகசஸ் ரீப் ஹோட்டல் (Pegasus Reef Hotel) வளாகத்தில் வெற்றிகரமான முறையில் நடைபெற்றது. இதற்காக பேராசிரியர் ரஞ்சித் பண்டார அவர்களும், “Colombo School of Business & Management” இன் வளவாளர்களும், நைட்டா நிறுவனத்தின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபையும், பிரதான அலுவலகத்தின் பணிக்குழுவும், தேசிய ரீதியிலான நிறுவனங்களும், மாவட்ட பணிக்குழுக்களின் பிரதிநிதித்துவத்துடனும் வெற்றிகரமாக முடிவடைந்தது.



RPL முறையின் கீழ் ஏஜெ சான்றிதழ்களைப் பெறும் 155 பேருக்கு சான்றிதழ்களை வழங்குவதற்காக அமைச்சிற்குப் பொறுப்பான கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களினதும் எமது தலைவரினதும், பிரதி தலைவரினதும் தலைமையில் கெணிமடல கேட்போர் கூடத்தில் சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

“ஷில்ப சவிய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் CIDA நிறுவனத்துடன் இணைந்து கட்டுமான கைத்தொழில் வினைஞர் (கொத்தனார்), தச்சுவேலை கைத்தொழில் வினைஞர் (கட்டிடங்கள்), டய்லர் மற்றும் மின் கைத்தொழில் வினைஞர் போன்ற துறைகளின் கீழ் ஏறத்தாழ 6000 திறமையான கைத்தொழில் வினைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காகப் நைட்டா நிறுவனத் தலைவரும், பிரதி தலைவருமு , CIDA நிறுவனத்தின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு விசேட கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினர்.

"You Lead" கருத்திட்டம் மற்றும் எமது அதிகாரசபையும் இணைந்து நவீனமயப்படுத்திய திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தலானது எமது அதிகாரசபையின் பிரதி தலைவரினதும், "You Lead" கருத்திட்டத்தின் பணிப்பாளர் ஹர்ஷ த சில்வா அவர்களினதும், திரு. பிறேமசிறி கமகே அவர்களினதும் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் பங்கேற்புடன் நடைபெற்றது.

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ள தொனிப்பொருளுக்கமைய குறைந்த வருமானம் பெறும் 100,000 குடும்பங்களுக்காக வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தரும் நோக்கில் பல்நோக்கு அபிவிருத்திப் பணிக்குழு திணைக்களத்துடன் தொழிற்பயிற்சியை வழங்குவதற்கான சிறப்பான பணியை நிறைவேற்றும் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவற்காக எமது அமைச்சிற்குப் பொறுப்பான கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையில் அமைச்சின் வளாகத்தில் எமது நிறுவனங்களான பல்நோக்கு அபிவிருத்தி பணிக்குழு திணைக்களத்திற்கும், தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.





2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 8 ஆந் திகதி பனாகொடை இராணுவ முகாமில் 100,000 பேருக்கு வேலைவாய்ப்பு என்ற திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கூட்டமொன்று தலைவரினதும், பிரதி தலைவரினதும், திரு. நந்த மல்லவஆராச்சி அவர்களினதும், ஏனைய இராணுவ அலுவலர்களினதும் பங்கேற்புடன் நடைபெற்றது.



நைட்டா நிறுவனத்தினால் தற்போது நடாத்தப்படும் "தாதியர்" கைத்தொழில் பாடநெறியானது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு, தனியார் வைத்தியசாலைகள் மற்றும் நிவாச சங்கத்தின் ஒத்துழைப்புடன் "தாதி உதவியாளர் NVQ 4 பாடநெறியாகவும், "தாதி NVQ மட்டம் 6" டிப்ளோமா பாடநெறியாகவும் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இங்கு முதல் கட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது லங்கா வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது.

NVQ – RPL வழிமுறையினூடாக திறமையான அழகுக்கலை நிபுணர்களை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் கட்டமானது வெற்றிகரமான முறையில் இலங்கையின் அனுபவம் வாய்ந்த பிரபலமான அழகுக்கலை நிபுணர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இலங்கையில் முதன் முறையாக வெகுச ஊடகவியலாளர்களுக்கான NVQ சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது குறித்த அறிவுறுத்தல்

நிகழ்ச்சித் திட்டத்தை நைட்டா கெணிமடல கேட்போர் கூடத்தில் நடாத்தியதோடு திரு. நரேந்திர ராஜபக்ஷ அவர்கள் வளவாளராகவும் கலந்து சிறப்பித்தார்.



பிரதி தலைவரின் தொனிப்பொருளுக்கமைய ஊழியர் இரசனைகளை விருத்தி செய்வதற்காக ஒவ்வொரு மாத கடைசி வெள்ளிக் கிழமையன்றும் விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துதல்.







பல்நோக்கு அபிவிருத்தி பணிக்குழு திணைக்களமானது எமது நிறுவனத்துடன் இணைந்து ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தை நடைமுறைப்படுத்தியவாறு தொழிற்பற்று மதிப்பீட்டுப் பரீட்சையை நடாத்தி பயிற்சித் துறைக்குத் தெரிவு செய்தல் தொடர்பான தேர்வினை நடாத்துதல் குறித்த கலந்துரையாடல் தேசிய இளைஞர் சேவைகள் சபையின் தலைவரினதும், பல்நோக்கு அபிவிருத்தி பணிக்குழு திணைக்களத்தின் பிரதிநிதிகளினதும், நைட்டா நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதி தலைவரின் தலைமையில் நடைபெற்றது. ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் முதலாவது கட்டமாக நியமனம் பெற்றவர்கள் நைட்டா நிறுவனத்துடன் இணைந்து தொழிற்பயிற்சியை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நிகழ்வு கேகாலை தொழில்நுட்பக் கல்லூரியின் வளாகத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் நாடுபூராகவும் வெற்றிகரமான முறையில் ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன.





100,000 வேலைவாய்ப்புகள் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை இலவாக்குவதற்காக புதிய தகவல் முறைமையொன்றை (MIS) அறிமுகப்படுத்தல், தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆய்வாளர்களிடம் அது குறித்து அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமானது எமது நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. 100,000 வேலைவாய்ப்பு திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்குரிய Office 365 இனை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி நடைபெற்றது. அந் நிகழ்விற்கு நைட்டாவின் தலைவரும், பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் சபையினரும் கலந்து கொண்டனர்.

நைட்டா மற்றும் பிட்ஸ் (FITS) ஆகிய நிறுவனங்கள் கைசாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பிரிவில்



பயிற்சி பெறுவோர்களுக்காக டிஜிடல் தொழினுட்பம் தொடர்பான உயர் டிப்ளோவை (HDDT) விருத்தி செய்தல் தொடர்பாக இலங்கையில் தகவல் தொழினுட்ப சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடனான விசேட கலந்துரையாடல் எமது நிறுவனத்தின் வளாகத்தில் நடைபெற்றது.

இவ்வருடம் SLon Pvt Ltd நிறுவனத்துடன் தற்போது பேணப்படும் உடன்படிக்கையை நீடித்ததன் மூலம் திறனான கைத்தொழில் வினைஞர்களை உருவாக்குவதனை பரந்தளவில் மேற்கொள்ள முடிந்தது. இதற்கு மேலதிகமாக கெபிட்டல் மஹாராஜா நிறுவனத்துடன் இணைந்து நீர்க்குழாய் கைத்தொழில் வினைஞர், பொருத்துனர் மற்றும் அலுமினிய தயாரிப்பாளர் துறைகளினூடாக திறன் கொண்ட இளைஞர்களை உருவாக்குவது தொடர்பில் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இவ்வருடத்தில் நடைபெற்றன.

50 வருடங்களை அபிமானத்துடன் பூர்த்தி செய்யவிருக்கும் எமது நிறுவனத்தின் நன்மதிப்புக்காக வருட இறுதியில் பௌத்த சமய வழக்கத்தின் படி தலைமை அலுவலகத்தின் பணிக்குழுவினரின் பங்குபற்றலுடன் தலைமை அலுவலகத்தின் வளாகத்தில் பிரித் ஓதும் புண்ணிய நிகழ்வும், சமய அனுட்டானங்களும் நடாத்தப்பட்டன.







## நிறுவனத்தின் தகவல்கள்



## 02. நிர்வாகக் குழு

| | |
|---|---|
| | **தலைமையகம்**<br>இல 971, ஸ்ரீ ஜயவர்தன புர மாவத்தை,<br>வெலிக்கடை இராஜகிரியா<br>T.P. 011-2888782 - 7 |
| 01 | **எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகம்** (IET)<br>18வது மைல் போஸ்ட், பௌத்த விகாரை<br>வீதி, கட்டுநாயக்க<br>T.P. 011-2252833 |
| 02 | **கைத்தொழிற் பொறியியல் பயிற்சி நிறுவகம** (IETI)<br>இல. 581, காலி வீதி, கட்டுபெத்தை,<br>மொரட்டுவை.<br>T.P. 011-2647393, 011-2643847 |
| 03 | **தன்னசைவு எந்திரவியற் பயிற்சி நிறுவகம்** (AETI)<br>இல. 69-ஏ, பஸ்லைன் சாலை,<br>ஒருகொடவத்த, வெல்லம்பிட்டிய.<br>T.P. 011-2572977 |
| | **அம்பாறை மாவட்ட அலுவலகம்**<br>இலக்கம் 06, ஜி.எஸ். ஒழுங்கை,<br>கல்முனைக்குடி 13,<br>கல்முனை.<br>T.P. 067-2229357 |
| | **அநுராதபுர மாவட்ட அலுவலகம்**<br>விமான நிலைய வீதி,<br>அனுராதபுரம்<br>T.P. 025-2223178 |
| | **பதுளை மாவட்ட அலுவலகம்**<br>இல. 4/10, மல்வத்த வீதி, பதுளுபிட்டிய,<br>பதுளை.<br>T.P. 055-2230644 |
| | **மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம்**<br>இல. 16/1, புதிய கல்முனை வீதி,<br>மட்டக்களப்பு.<br>T.P. 065-2228130 |
| | **கொழும்பு மாவட்ட அலுவலகம்**<br>242 ஹெவ்லொக் டவுன் வீதி,<br>கொழும்பு 05<br>T.P. 011-2587258, 011-2597671 |
| | **காலி மாவட்ட அலுவலகம்**<br>இல. 395, வக்வெல்ல வீதி, ஜூல்கஹா,<br>காலி.<br>T.P. 091-2235628 |
| | **கம்பஹா மாவட்ட அலுவலகம்**<br>இல. 61/5 மினுவங்கொட வீதி,<br>கம்பஹா.<br>T.P. 033-2232874 |
| | **அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம்**<br>இல.39 பள்ளிக்குடாவ வீதி,<br>தங்காலை.<br>T.P. 047-2241512 |
| | **யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம்**<br>இல 44, சோமசுந்தரம் அவனியூ,<br>சுண்டிக்குளி - யாழ்ப்பாணம்.<br>T.P. 021-2222383 |
| | **களுத்துறை மாவட்ட அலுவலகம்**<br>326/2, 3ம் மாடி, காலி வீதி, களுத்துறை<br>தெற்கு.<br>T.P. 034-2224239 |

| | |
|---|---|
| | **கண்டி மாவட்ட அலுவலகம்**<br>இல. 108/2 பீ, திவங்கபோதி மாவத்தை,<br>கண்டி.<br>T.P. 081-2201918 |
| | **கேகாலை மாவட்ட அலுவலகம்**<br>பண்டாரநாயக்க மாவத்தை,<br>பல்லபான, கலிகமுவ நகரம்.<br>T.P. 035-2284931 |
| | **கிளிநொச்சி மாவட்ட அலுவலகம்**<br>ஏ9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி.<br>T.P. 034-3942824 |
| | **குருணாகலை மாவட்ட அலுவலகம்**<br>நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ,<br>குருணாகல்<br>T.P. 037-2223789 |
| | **மாத்தறை மாவட்ட அலுவலகம்**<br>இல 27 ஏ, திறந்த பல்கலைக்கழக வீதி,<br>நூபே, மாத்தறை<br>T.P. 041-2226958 |
| | **மன்னார் மாவட்ட அலுவலகம்**<br>952/1 நல்லாயர் வீதி மன்னார்<br>T.P. 023-2223404 |
| | **மாத்தளை மாவட்ட அலுவலகம்**<br>இல.11, விகாரை வீதி, மண்தன்டவளை,<br>மாத்தளை.<br>T.P. 066-2223173 |
| | **மொனராகலை மாவட்ட அலுவலகம்**<br>பழைய கச்சேரிக் கட்டிடத் தொகுதி,<br>மொணராகலை<br>T.P. 055-2276504 |
| | **முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம்**<br>மாங்குளம் வீதி முள்ளியவளை,<br>முல்லைத்தீவு<br>T.P. 021-2061012 |
| | **நுவரெலிய மாவட்ட அலுவலகம்**<br>இல: 116, கோவில் வீதி, ஹாவாஎலிய,<br>நுவரெலியா.<br>T.P. 052-2223702 |
| | **பொலன்னறுவை மாவட்ட அலுவலகம்**<br>இல:103, நீர்ப்பாசனப் பிரதேசம், புதிய நகரம்,<br>பொலநறுவை.<br>T.P. 027-3223023 |
| | **புத்தளம் மாவட்ட அலுவலகம்**<br>மொலவத்தை, மெதகம வீதி,<br>மாதம்பை.<br>T.P. 032-2248250 |
| | **இரத்தினபுரி மாவட்ட அலுவலகம்** 642,<br>வித்தியாலய மாவத்தை, புதிய நகரம்,<br>இரத்தினபுரி.<br>T.P. 045-2228667 |
| | **திருகோணமலை மாவட்ட அலுவலகம்**<br>இல.103/7, தபால் கந்தோர் வீதி,<br>திருகோணமலை.<br>T.P. 026-2226569 |
| | **வவுனியா மாவட்ட அலுவலகம்**<br>பூங்கா வீதி,<br>வவுனியா.<br>T.P. 024-2224679 |

02. நிர்வாகக் குழு

1. திரு. தரங்க நளீன் கம்லத்
தலைவர்
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகடை, இராஜகிரிய

2. பேராசிரியர் மஹிந்த ரூபசிங்க,
பிரதி தலைவர்
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகடை, இராஜகிரிய

3. திரு. ஜே.ஏ.டீ.ஜே. ஜயலத்
பதில் கடமையாற்றும் பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
இல. 354/2, எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05

4. திருமதி. எஸ்.பீ. ஸ்ரீ யாகாந்தி
திட்டமிடல் திணைக்களம்,
முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு,
நிதி அமைச்சு,
செயலாளர் அலுவலகம்,
கொழும்பு 01

5. திரு.ஜே.சீ.கே. பஸ்நாயக்க.
இல. 2/ஏ/25, ஜயவடனகம,
பத்தரமுல்லை.

6. திரு. மொஹமட் மிக்டாட்
இல 89/2, தெஹிவல வீதி,
பெப்பிலியான,
பொரலஸ்கமுவ

7. திரு. லக்சென் அபேகுணவர்தன
இல. 524, "அபேசீர்"
கோணவலை,
களனி.

8. திரு. கயான் மேனக திசாநாயக்க
இல. 82/1, அரலிய உயன,
"செயாரா", பல்லேகம,
எம்பிலிபிட்டிய.

9. திரு. ஜனக கமல்கொட
இல. 1361/2, பழைய கெஸ்பேவ வீதி,
கங்கொடவில,
நுகேகொடை

10. திரு. ஹசித ஏக்கநாயக்க
இல. 79/5, மொறகஹமுல,
மெதமஹநுவர
கண்டி

11. திரு. ரங்க பெரேரா,
சத்தர நிறுவனம்,
மகரகமை

12. திரு. எஸ்.கே.வை.ஜீ.எஸ்.கே. செனரத்
இல. 309, கொழும்பு வீதி,
கம்பகா.
திரு.எஸ்.ஏ.டீ. திலக் பிறேமலால்,

13. இல. 123/1 ஏ, புகையிரத நிலையம்,
கங்கொடவிலை,
நுகேகொடை

14. திரு. சஹன் த சில்வா
இல. 1009/18, 8 ஆம் ஒழுங்கை,
சுமுது மாவத்தை,
மாலம்பே

15. திரு. கிருஷான் சியம்பலாபிட்டிய
ஒருங்கிணைப்புச் செயலாளர்,
நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிப்பொருள் வெளியேற்றம், துப்பரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,
18 ஆம் மாடி, சுஹுருபாய,
ஸ்ரீ சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை.

## பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| 1. திரு. தரங்க நளீன் கம்லத் | தலைவர் |
| 2. பேராசிரியர் திரு. மஹிந்த ரூபசிங்க | பிரதி தலைவர் |
| 3. திருமதி. டீ.பீ. முதிதா பத்மஜாயீ | பணிப்பாளர் நாயகம் (ப.க.) |
| 4. திரு.பீ.ஆர். றொட்றிகோ | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) |
| 5. திருமதி. ஆர்.எம்.ஏ.பீ. சமரதிவாகர | பணிப்பாளர் (தரநிர்ணயம்) |
| 6. சுமேத ஜயசிங்க | பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் ஆளணி) |
| 7. திரு.ஜீ.எச்.வீ.என்.டப். த சில்வா | பிரதிப் பணிப்பாளர்/ பணிப்பாளர் (பயிற்சி) ப.க. (01.07.2020 இலிருந்து இதுவரையில்) |
| 8. திருமதி.என்.டப்.என். சந்தமாலி | உள்ளக கணக்காய்வு/ பணிப்பாளர் (நிதி) அ.வ. (11.06.2020 இலிருந்து இதுவரையில்) |
| 9. திரு.டீ.பீ.கே.பெரேரா | பிரதிப் பணிப்பாளர் (தரநிர்ணயம்) |
| 10. திரு.சீ.பீ. சுபசிங்ஹ | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 11. திரு.எம்.ஐ.எம்.அசார் | பணிப்பாளர் (நிதி) அ.வ. (25.05.2020 இலிருந்து இதுவரையில்) – கணக்காளர் (SLGTI – 26.05.2020 வரை) |
| 12. திரு.எஸ்.வீ.பீ. விக்கிரமசிங்க | உதவிப் பணிப்பாளர் (மதிப்பீடு) |
| 13. திரு.டப்.ஏ.கே.எஸ். குமார | உதவிப் பணிப்பாளர் (பணிப் பயிற்சி)/ உதவிப் பணிப்பாளர் (விசேட தொழினுட்ப பயிற்சி) |
| 14. திரு.ஏ.ஜே. பத்திரண | உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழினுட்பம்) |
| 15. திரு.எம்.எல்.பீ. பர்னாந்து | உதவிப் பணிப்பாளர் (தொழில் வழிகாட்டி மற்றும் விற்பனை) |
| 16. திரு.ஜீ.பீ. சுனில் | உதவிப் பணிப்பாளர் (Craft Evaluation EBT,CBT) |
| 17. திரு.ஆர்.டப்.ஏ.ஜே. ரத்னாயக்க | உதவிப் பணிப்பாளர் (ஆளணி முகாமைத்துவம்) |
| 18. திருமதி. யூ.எம். பிரபோஷினீ | உதவிப் பணிப்பாளர் (கணக்குகள் மற்றும் நிர்வாகம்) |
| 19. திரு.என்.டீ.பீ. உஸ்கொடாரச்சி | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் வழங்கல்) |
| 20. டீ.எஸ்.பீ.ஏ. விக்கிரமசிங்க | உதவிப் பணிப்பாளர் (ஆளணி முகாமை அபிவிருத்தி) |
| 21. திருமதி. பீ. எம். விதானகே | உதவிப் பணிப்பாளர் (பயிற்சி சேவைகள்) |
| 22. திரு.ஏ.எச்.எஸ்.பீ. விஜேரத்ன | உதவிப் பணிப்பாளர் (கண்காணிப்பு) |
| 23. திரு.எம்.எம்.பீ. பர்னாந்து | பயிற்சி முகாமை/ உதவிப் பணிப்பாளர் (பேணல் மற்றும் சிவில்) ப.க. |
| 24. திருமதி. எம்.ஜீ.பீ.டீ. மல்காந்தி | பயிற்சி அலுவலர்/ உதவிப் பணிப்பாளர் (SSCD மற்றும் LRD) ப.க. |
| 25. திருமதி.பீ.எம். குமாரசிங்க | பணிப்பாளர்/அதிபர் - IETI (2016.05.01 ஆந் திகதியிலிந்து இளைப்பாறினார்) |
| 26. திரு.எம்.எச்.என்.பீ. தர்மசிறி | பணிப்பாளர்/அதிபர் (ப.க.) – IETI (04.08.2020 ஆம் திகதியிலிருந்து இதுவரை) |
| 27. திரு.டீ.ஆர். சப்புதந்த்றீ | பணிப்பாளர்/ அதிபர் - IET |
| 28. திருமதி.எச்.ஏ.என்.டீ. குமாரி | பணிப்பாளர்/ அதிபர் - AETI |

## மாவட்ட முகாமையாளர்கள்

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | திரு.எஸ்.டீ. அபேவிக்கிரம |
| அம்பாறை | திரு.ஏ. மசூர் |
| கேகாலை | திருமதி.டீ.டீ. ஜயலத் |
| கொழும்பு | திரு.எம்.ஆர்.டீ.ஏ.எஸ். குணரத்ன |
| மாத்தறை | திரு.யூ.எம்.கே. நாணாயக்கார |
| பதுளை | திரு.பீ.கே.பீ. குணவர்தன |
| காலி | திரு.பீ. நாரன்கொட |
| மாத்தளை | திரு.பீ.எம்.ஜே.எஸ்.கே. ரணராஜா |
| வவுனியா | திரு.எஸ். பவளநாதன் (2020.07.06 ஆந் திகதியிலிருந்து இளைப்பாறினார்) |
| | திரு.எஸ். சுபாஷ் (ப.க.) (2020.07.20ஆந் திகதியிலிருந்து இதுவரை) |
| மட்டக்களப்பு | திரு.எஸ்.ஏ.எம்.எஸ்.எம். சலீம் மௌலானா |
| மன்னார் | திரு.எஸ். வீனஸ் |
| கண்டி | திரு.பீ.ஏ.யூ.ஏ. கருணாரத்ன |
| யாழ்ப்பாணம் | திரு.ஜீ.டீ. ரத்னகுமார (ப.க.) |
| புத்தளம் | திரு.ஜே. உதயவர்தன (ப.க.) |
| கம்பஹா | திரு.ஏ.ஜீ.டீ. விஜேரத்ன (ப.க.) |
| களுத்துறை | திருமதி.எச்.எம்.டீ.கே. விஜேரத்ன |
| அனுராதபுரம் | திரு.டீ.எம்.டீ.பி. கருணாரத்ன (ப.க.) |
| மொணராகலை | திரு.எஸ்.பீ.சீ.ஜே. மைத்ரீதாஸ (ப.க.) |
| குருணாகலை | திரு.ஆர்.எம்.என்.எஸ்.கே. ரத்னாயக்க (ப.க.) |
| இரத்தினபுரி | திரு.வை.எஸ். ஜயதிலக (ப.க.) |
| பொலன்னறுவை | திரு.யூ.ஜீ.என். சமீர (ப.க.) |
| முல்லைத்தீவு | திருமதி.எஸ். சிவகௌரி (ப.க.) |
| திருகோணமலை | திரு.கே. பத்மநாதன் (ப.க.) |
| கிளிநொச்சி | திரு.வை. யோகேஸ்வரன் (ப.க.) |
| நுவரெலியா | திரு.டீ.ஏ.டீ. சூரியபண்டார (ப.க.) |

## National Apprentice & Industrial Training Authority
*Organizational Structure*



## அதிகாரசபையின் நோக்கங்கள்

தாபிப்புச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்கப் பந்தியின் பிரகாரம் இந்த அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன.

(அ) தொழிற்பயிற்சிகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் வழங்குதல்.

(ஆ) தொழிற்பயிற்சிக்குரிய நியமங்களை நிர்ணயித்தல்.

(இ) தொழிற்பயிற்சிக்குரிய பரீட்சைகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் ஏனைய மானியங்களை வழங்குதல்.

(ஈ) தேசிய தொழினுட்பவியலாளர் பரீட்சையை நடாத்துதல்.

(உ) தொழிற் பயிற்சி குறித்த ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ஊ) பல்வேறான திறன்களை மேம்படுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான போட்டிகளை நடாத்துதல்.

(எ) தொழிற் பயிற்சியை வழங்கும் நிறுவனங்களினதும் ஏனைய நிறுவனங்களினதும் பயிற்சி வழங்கும் திறன்களை அபிவிருத்தி செய்தல்.

(ஏ) தொழிற் பயிற்சி தொடர்பில் தொழிற் பயிற்சி ஆணைக்குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

(ஐ) சம நோக்கங்களையுடைய இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அமைந்துள்ள நிறுவனங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்களை டிப்ளோமா மற்றும் பட்டதாரி ஆகியவற்றை சமமான தரங்களாக கருதுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

## அதிகாரசபையின் பிரதான பணிகள்/ நிகழ்ச்சித் திட்டங்கள்

(அ) அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சிகளை வழங்குதல், 04 தேசிய நிறுவனங்கள் மற்றும் நாடுபூராகவும் அமையப்பெற்றுள்ள பயிலுநர் பயிற்சி நிலையங்களின் மூலமாக இரட்டை நிலைப் பயிற்சிகளை வழங்குதல்.

(ஆ) ஏனைய தொழிற் பயிற்சி பெறுவோரை வெவ்வேறான நிறுவனங்களுக்கு அனுப்பி பணிப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.

(இ) மொறட்டுவை, பேராதெனிய மற்றும் றுகுணு பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கும் ஏனைய டிப்ளோமா மாணவர்களுக்கும் தேவையான எந்திரவியல் பயிற்சிகளை வழங்குதல்.

(ஈ) முறைசாரா அடிப்படையில் திறன்களை பெற்றுள்ள கைத்தொழில் வினைஞர்களுக்கு முன் மதிப்பீட்டு முறைக்குத் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் வழங்குதல், தொழிலுக்கு ஏற்ற வகையில் தகைமைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் தேவையான தேசிய தொழில் பரீட்சைகளை நடாத்துதல்.

(உ) தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல்.

(ஊ) பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு இடைவிலகியோர் மற்றும் ஏனைய இலக்குக் குழுக்களுக்குத் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

## பயிற்சி முறைகளும் ஏனைய பிரதான நிகழ்ச்சித் திட்டங்களும்

பயிற்சி முறைகளை பிரதானமாக கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி, நிறுவனஞ்சார் பயிற்சி / நிலைய மைய இரட்டைப் பயிற்சி, எந்திரசாலைப் பயிற்சி, பணிப் பயிற்சி என வகைப்படுத்தலாம்.

- **கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி**

நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி நடவடிக்கைகளுக்கிடையே பிரதானமான பயிற்சி முறையாக இப் பயிற்சி முறை விளங்குவதோடு, கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி வழங்குவதற்கென இலங்கையில் அதிகாரம் பெற்றுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாக தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையாகும். இப் பயிற்சி முறையில் பயிலுநர்கள் பயிற்சிக் காலத்தில் வேலை செய்து கொண்டு கற்பதன் மூலமாகத் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்ளும் நிமித்தம் அவர்கள் கைத்தொழிலில் இணைக்கப்படுகின்றனர்.

இங்கு பயிற்சி பெறுநருக்கு பின்வரும் முறைகளில் ஒன்றின் கீழ் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் உண்டு.

i. கைத்தொழில் வினைஞர் பயிலுநர் பயிற்சி

ii. தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் முறை

iii. நிலைய மட்டப் பயிலுநர் பயிற்சி

iv. கிராமிய மட்டப் பயிலுநர் பயிற்சி

- **கைத்தொழில் வினைஞர் பயிலுநர் பயிற்சி**

ஒவ்வொரு துறைக்கும் விசேடத்துவம் வாய்ந்த தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் ஆலோசனைக் குழுவினால் (NITAC) ஒவ்வொரு துறைக்கும் பயிற்சி நியமங்கள் தயாரிக்கப்படும் போது அந் நியமங்களுக்கமைவாக பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கைத்தொழிலர்கள் மற்றும் பயிலுநர்கள் இடையே உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர் ஒவ்வொரு நிறுவனத்திலும் பயிலுநர் பயிற்சியை ஆரம்பிக்க முடியும்.

- **தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் முறைமை** (NVQ)

பயிலுநர் பயிற்சியின் கீழ் 51 தொழில்களை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இம் முறையில் கைத்தொழில் வினைஞர் பயிலுநர் முறையிலே கைத்தொழிலர்கள் மற்றும் பயிலுநர்கள் இடையே உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர் ஒவ்வொரு நிறுவனத்திலும் பயிலுநர் பயிற்சியை ஆரம்பிக்க முடியும். இந்த முறையில் பயிற்சி நிறுவனங்கள் / கைத்தொழில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுடன் பயிலுநர்கள் தொடர்ச்சியான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுதலும் வேண்டும். பயிற்சியின் இறுதியில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டாளர்களினால் இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை நடாத்தப்பட்டு அந்தந்த மட்டங்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

- **அமைவிட பயிலுநர் பயிற்சி**

இப் பயிற்சி முறையின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உரித்தான கைத்தொழிற் பயிற்சி முறைகளை பெற்றுக் கொள்ள பயிலுநர்களை ஈடுபடுத்துவதோடு, குறித்த பயிற்சி நிறுவனம் மற்றும் அதிகாரசபையுடன் இணைந்து தயாரிக்கப்படுகின்றது.





- **கிராமிய மட்ட பயிலுநர் பயிற்சி**

கைத்தொழில் வினைஞர் மட்ட தொழில்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பயிற்சி தராதரங்களுக்கு அமைவாக பயிற்சி வழங்கப்பட முடியாத பயிலுநர்களுக்கு கிராமிய பயிற்சி வசதிகளை உபயோகித்து கிராமிய மட்டத்திலுள்ள பயிற்சி பெறுநர்களுக்குப் பயிற்சி வழங்குவதனை இலக்காகக் கொண்டு கிராமிய பயிலுநர் பயிற்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான பயிற்சி தராதரங்கள் குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடி அதிகாரசபையினூடாகத் தயாரிக்கப்படும்.

கைத்தொழில் அடிப்படையிலான கைத்தொழில் வினைஞர் பயிலுநர்களுக்கும் தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் பெறவுள்ளோருக்குமான கோட்பாட்டு அறிவினை பயிற்சியினூ டாகவும் தொலைக்கல்வி ஊடாகவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பயிலுநர்களுக்குத் தேவையான அடிப்படை கோட்பாடு மற்றும் நடைமுறை அறிவு குறித்த காலப்பகுதியில் உரிய பயிற்சி மத்திய நிலையத்தினூடாக வழங்கப்படுவதோடு, மேலும் அவர்களுக்குப் பாட விடயங்கள் குறித்த சுய கற்றலுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அச்சடிக்கப்பட்ட பாடவிதானங்கள்/ தொகுதிகள் அதிகாரசபையினூ டாகத் தபால் மூலமாக வழங்கப்படும். பாடத்தொகுதிகளின் முடிவில் காணப்படும் வினாக்கொத்து பத்திரத்திற்கு பயிலுநர்கள் விடை எழுதி அனுப்பிய பின்னர் அவை திருத்தப்பட்டு மீண்டும் தபால் மூலமாக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அச்சு குறித்த பாடத்தொகுதியை கற்கும் போது பயிலுநர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும், நெருக்கடிகளையும் தீர்த்துக் கொள்வதற்காக தற்போது வார இறுதி வகுப்புக்கள் அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாகத் தொழிலுக்குத் தேவையான ஆங்கில அறிவினை மேம்படுத்துவதற்காக ஆங்கில பாடத்தொகுதிகளும் பயிலுநர்களுக்கு வழங்கப்படுகின்றது.

- **நிறுவனஞ்சார் பயிற்சி / மத்திய நிலையஞ்சார் இரட்டைப் பயிற்சி**



இம் முறையின் கீழ் பயிலுநர்கள் நேரடியாகத் தேசிய பயிற்சி நிறுவகத்திற்கு அல்லது பிரதேச பயிற்சி நிறுவனத்திற்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இணைக்கப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன் அதன்பின்னர் அரச அல்லது தனியார் நிறுவனமொன்றுக்குப் பணி தொடர்பான பயிற்சிக்காக அனுப்பப்படுவர். பயிற்சி நிறுவனம் அல்லது பயிற்சி நிலையம் மூலம் குறித்த கோட்பாடு மற்றும் நடைமுறை அறிவு வழங்கப்படும். மீளாய்வாண்டில் அதிகாரசபையின் கீழ் தேசிய நிறுவகங்கள் நான்கிற்கு (4) மேலதிகமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் 74 மத்திய நிலையங்கள் நடாத்தப்படுகின்றன. இந் நிலையங்களில் நடாத்தப்படும் கற்கைநெறிகளின் கால எல்லைகள் 06 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரையாக வேறுபட்டு காணப்படுகின்றன.

- **எந்திரசாலைப் பயிற்சி.**

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கங் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் 38 (சீ) பிரிவிற்கு அமைய, மொறட்டுவை, பேராதெனிய மற்றும் றுஹுணு பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களின் பொறியியல் பட்டத்திற்கும், பல்கலைக்கழக மற்றும் ஏனைய தொழிற் கல்வி நிறுவனங்களினூடாக நடாத்தப்படும் டிப்ளோமா கற்கைநெறிக்கும் தேவையான எந்திரசாலை பயிற்சிகள் அதிகாரசபையின் ஊடாக வழங்கப்படுகின்றது.






- **தொழிலுடனானப் பயிற்சி**

ஏனைய தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நிறுவனப் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு அதிகாரசபையினூடாக ஆறு மாத கால வேலையுடனான பயிற்சி வழங்கப்படுகின்றது. விசேடமாக கைத்தொழிற் பல்கலைக்கழகம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அரச.·. தனியார் நிறுவனங்களில் தொழிற் பயிற்சித் துறையில் பயிற்சி பெறுவோருக்குக் கைத்தொழிற் பிரிவில் பிரயோகப் பயிற்சியினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென இப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் வினைஞர் பயிலுநர்கள் மற்றும் பயிலுநர் சான்றிதழ் முறையின் கீழ் பயிற்சியினை நிறைவு செய்த பயிலுநர்களுக்கு இறுதி தொழிற் பரீட்சை தலைமை காரியாலயத்தின் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படும். எனினும், கூட்டுக் காரியாலயத்தின் தோற்றத்துடன் இச் செயற்பாட்டினை பரவலாக்கம் செய்யவுள்ள நிலையில் தற்போது கொழும்பு, கம்பஹா,

இரத்தினபுரி மாவட்டங்களில் மாத்திரம் குறித்த கூட்டுக் காரியாலயத்தினூடாக இறுதி தொழிற் பரீட்சை நடாத்தப்படுகின்றது.



இதற்கு மேலதிகமாகத் தேசிய தொழிற் தகைமை பரீட்சை (NVQ) மற்றும் தொழிற் பரீட்சை (NTT) தொடர்பான மதிப்பீடுகள் தலைமைக் காரியாலயத்தின் ஊடாக நடாத்தப்படும்.

| தொழிற்பாட்டு நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல் | | | 31,049,538.47 | | 50,761,313.13 |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | | | | |
| ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | | (22,004,275.21) | | (156,765,350.69) | |
| தொழிற்படு மூலதனங்கள் | | 15,999,166.34 | | 70,444,547.65 | |
| நிலையான சொத்து விற்பனையால் பெற்ற காசு | | - | | 33,281.00 | |
| பிற்போடப்பட்ட வருமானங்களின் செம்மையாக்கங்கள் | | - | | - | |
| முதலீட்டு நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல் | | | (6,005,108.87) | | (86,287,522.04) |
| **நிதிசார் நடவடிக்கைகள்** | | | | | |
| அரசாங்கத்தின் மூலதனக் கொடை | | 39,118,650.63 | | 50,208,270.31 | |
| SSDP மூலதனம் | | 2,426,027.46 | | 27,621,285.75 | |
| பெறப்பட்ட மானியங்கள் | | 759,900.00 | | - | |
| வைப்புக்களின் வட்டி | | (7,669,339.24) | | 7,712,910.34 | |
| கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவகத்தின் Boundry Wall Fund | | - | | | |
| நிதிசார் நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல் | | | 34,635,238.85 | | 85,542,466.40 |
| தேறிய காசு மற்றும் காசுக்கு சமமானவை அதிகரிப்பு / குறைவு | | | 59,679,668.45 | | 50,016,257.49 |
| குறித்த காலப் பகுதியின் ஆரம்ப காசு மற்றும் காசுக்கு சமமானவை | | | 118,687,450.91 | | 68,671,193.42 |
| குறித்த காலப் பகுதியின் இறுதி காசு மற்றும் காசுக்கு சமமானவை | | | **178,367,119.36** | | **118,687,450.91** |

## தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
## 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமைத்துவ மாற்றல்கள் கூற்று

| விபரம் | திரண்ட நிதி | அரசாங்க மூலதனக் கொடை | SSDP மூலதனம் | பிற்போடப்பட்ட வருமான கொடை (பரிப்பு) | பெறப்பட்ட உதவிகள் | பகுதி நேர கணக்கீட்டு இலாபம் | மோட்டார் வண்டி வருமான ஒதுக்கம் | பகுதி நேரம் மீதான மூலதன ஒதுக்கம் | பகுதி நேரம் மீதான கடப்பாட்டு ஒதுக்கம் | AETI காணி மாற்றல் இலாபம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியில் மீதி** | **1,163,368,948.25** | **11,213,031.85** | **67,389,151.99** | **1,192,289,150.75** | **113,603,559.55** | **36,228,874.49** | **7,415,059.28** | **11,148,914.78** | **5,902,130.56** | **290,860,815.72** | **-** | **2,899,419,637.22** |
| கூட்டுக : மீளாய்வாண்டின் கொடுக்கல் வாங்கல் | | | | | 759,900.00 | | | | | | | **759,900.00** |
| பரிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட நூலக நிதி | | | | | | | | | | | | **-** |
| நிறுத்தி வைத்த வருமானங்கள் | (171,220,237.15) | | | | | | | | | | | **(171,220,237.15)** |
| **மீள குறிப்பிடப்படும் ஆரம்ப மீதி** | **992,148,711.10** | **11,213,031.85** | **67,389,151.99** | **1,192,289,150.75** | **114,363,459.55** | **36,228,874.49** | **7,415,059.28** | **11,148,914.78** | **5,902,130.56** | **290,860,815.72** | **-** | **2,728,959,300.07** |
| GOSL ஆண்டிற்காக பெறப்பட்ட மூலதனக் கொடை | | 43,250,000.00 | 2,426,027.46 | | | | | | | | | **45,676,027.46** |
| புத்துருவாகும் மூலதனம் | | (4,131,349.37) | | | | | | | | | | **(4,131,349.37)** |
| ஆண்டின் இலாபம் | (43,708,459.87) | | | | | | | | | | | **(43,708,459.87)** |
| ஆண்டிற்கான செம்மையாக்கம் | (11,529,529.82) | | | | | 6,442,642.23 | | | | | | **(5,086,887.59)** |
| கடந்த ஆண்டு நிறுத்தி வைத்த வருமானங்கள் | | | | | | | | | | | | **-** |
| RDA விடம் பெறப்பட்ட உதவிகள் | | | | | | | | | | | | **-** |
| மோட்டார் வண்டி மீள் மதிப்பீட்டு இலாபம் | | | | | | | | | | | 92,907,959.29 | **92,907,959.29** |
| பிற்போடப்பட்ட பரிப்பிற்கு மாற்றுதல் | | (37,832,519.57) | (7,025,672.46) | 44,858,192.03 | | | | | | | | **-** |
| பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றுதல் | | | | -123,540,451.96 | | | | | | | | **(123,540,451.96)** |
| **2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் மீதி** | **936,910,721.41** | **12,499,162.91** | **62,789,506.99** | **1,113,606,890.82** | **114,363,459.55** | **42,671,516.72** | **7,415,059.28** | **11,148,914.78** | **5,902,130.56** | **290,860,815.72** | **92,907,959.29** | **2,691,076,138.03** |

## தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

**நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புகள்**

*ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்*

| | காணி | குத்தகைக் காணி | கட்டிடங்கள் மற்றும் மேலதிகமான விருத்திகளும் | ஆதனம் மற்றும் பொறி | தளபாடம், பொருத்துகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இருப்பு உருப்படிகள் | கணனி மற்றும் பாகங்கள் | மோட்டார் வாகனம் | நூலக புத்தகங்கள் | பயிற்சி உபகரணங்கள் | அருவச் சொத்துக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம் அல்லது மதிப்பீட்டு பெறுமதி** | | | | | | | | | | | |
| ஆண்டின் ஆரம்ப மீதி | 48,168,918.74 | 353,769,026.64 | 2,501,231,629.44 | 90,510,894.11 | 312,229,730.26 | 414,984,254.51 | 126,354,444.07 | 12,518,713.08 | 1,328,423,780.93 | 21,595,067.58 | 5,209,786,459.36 |
| கூட்டுக : மீளாய்வாண்டின் சேர்ப்பனவுகள் | - | - | 2,490,136.01 | - | 10,902,666.25 | 6,012,149.00 | - | 20,000.00 | 2,633,194.26 | - | 22,058,145.52 |
| ஆண்டின் மீள் மதிப்பீடுகள் | - | - | - | - | - | - | 93,265,000.00 | - | - | - | 93,265,000.00 |
| கூட்டுக / கழிக்குக : செம்மையாக்கம் | - | - | 23,392,900.54 | - | 74,879.97 | - | (126,354,444.07) | - | - | - | (102,886,663.56) |
| கழிக்குக : விற்பனைகளின் செம்மையாக்கம் | - | - | - | - | - | -19,956.00 | - | (225.00) | - | - | (20,181.00) |
| ஆண்டின் இறுதி மீதி | **48,168,918.74** | **353,769,026.64** | **2,527,114,665.99** | **90,510,894.11** | **323,207,276.48** | **420,976,447.51** | **93,265,000.00** | **12,538,488.08** | **1,331,056,975.19** | **21,595,067.58** | **5,222,202,760.32** |
| **திரண்ட தேய்வு** | | | | | | | | | | | |
| ஆண்டின் ஆரம்ப மீதி | - | 9,860,391.55 | 672,504,425.50 | 39,694,717.28 | 227,924,890.06 | 350,471,819.56 | 125,941,456.11 | 10,657,499.47 | 925,942,960.02 | 5,727,590.65 | 2,368,725,750.20 |
| கூட்டுக : மீளாய்வாண்டின் காலத் தேய்மானம் | - | 452,458.33 | - | - | - | - | - | - | - | - | 452,458.33 |
| கூட்டுக : ஆண்டிற்கான தேய்மானம் | - | - | 112,003,858.20 | 5,953,855.76 | 18,403,303.52 | 25,549,627.42 | 11,770,019.60 | 246,528.40 | 47,459,436.73 | 2,020,382.57 | 223,407,012.19 |
| கூட்டுக / கழிக்குக : செம்மையாக்கம் | - | - | 2,901,238.80 | 895,149.15 | 59,516.86 | - | (125,997,403.46) | 6,838.93 | 78,646.83 | - | (122,056,012.89) |
| கழிக்குக : விற்பனைகளின் செம்மையாக்கம் | - | - | - | - | (6,042.38) | (19,550.32) | - | - | - | - | (25,592.70) |
| ஆண்டின் இறுதி மீதி | **-** | **10,312,849.88** | **787,409,522.50** | **46,543,722.19** | **246,381,668.06** | **376,001,896.66** | **11,714,072.25** | **10,910,866.80** | **973,481,043.58** | **7,747,973.21** | **2,470,503,615.14** |
| **இற்றைப் பெறுமதி** | | | | | | | | | | | |
| 2020 டிசம்பர் 31 ஆந் திகதியில் | **48,168,918.74** | **343,456,176.76** | **1,739,705,143.49** | **43,967,171.92** | **76,825,608.42** | **44,974,550.85** | **81,550,927.75** | **1,627,621.27** | **357,575,931.61** | **13,847,094.37** | **2,751,699,145.18** |
| 2019 டிசம்பர் 31 ஆந் திகதியில் | **48,168,918.74** | **343,908,635.74** | **1,828,727,203.85** | **50,816,176.83** | **84,304,839.91** | **64,512,434.95** | **412,987.96** | **1,861,213.60** | **402,480,995.90** | **15,867,477.14** | **2,841,060,884.62** |

## தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
## கணக்கீட்டுக் கொள்கைகள்

**பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்**

### 1. அறிக்கையிடும் நிறுவனம்

1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (இதனகத்துப் பின்னர் நிறுவனம் எனக் குறிப்பிடப்படும்) இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, இராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளது.

### 2. தயாரிக்கப்படும் அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதிசார் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
நிதிசார் அறிக்கைகள் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிசார் அறிக்கைகள் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.1 நிதியாண்டு 2020 ஆம் ஆண்டில், Tally System மீதிகளையும், நிதிக் கூற்றுக்களின் மீதிகளையும் இணக்கம் செய்வதற்காக தேசிய ரீதியான நிலையங்களில் பகுதி நேர பாடநெறிகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் Tally System இற்கு எடுக்கப்பட்டுள்ளது.

### 3. ஒப்பீட்டுத் தகவல்கள்

3.1 கடந்த ஆண்டிற்கான பெறுமதிகள் குறித்த ஆண்டின் சமர்ப்பித்தல்களுடன் தொடர்புடையவாறு ஒப்பிடப்பட்டுள்ளது.

### 4. அரசாங்கத்தின் கொடைகள் மற்றும் மானியங்கள்

4.1 நிறுவனத்தின் செலவுகளானது, அரசாங்கத்தின் கொடைகளின் மீது தங்கியுள்ளது அக் கொடைகள் பெறுகைகளாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவுகளுக்காக குறித்த அரசாங்கத்தின் கொடைகளானது விரிவாக வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளதோடு, மூலதன செலவுகளுக்காக பெறுகைகள் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி நிதியில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

4.2 சொத்துக்களின் மாற்றுகையாக கிடைக்கப்பெறும் அரசாங்கத்தின் கொடைகளானது, பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதி அவற்றின் ஆயுட்காலத்தின் படி கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

### 5. சொத்துகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை

5.1 தொக்குகள்

தொக்கானது பொதுவாக கிரய அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. வழக்கிழந்த அச்சீட்டு பொருட்களின் தொக்கிற்காக 5% ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

5.2 பெறுகைகள்

அறவிடப்பட வேண்டிய தொகைகள் அவ்வாறே காட்டப்பட்டுள்ளதோடு, 2020.12.31 ஆந் திகதியின் போது அதிகார சபையில் சேவையாற்றாத பணியாளர்களின் ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடனுக்காக 100% ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. உள்ளக ரீதியான கொடுக்கல்வாங்கல்களில் அறவிடப்பட வேண்டிய கடன் தவிர்ந்த ஏனைய அனைத்து கடன்பட்டோர்களுக்காக 5% ஏற்பாடு அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

(அ) ஏற்பிசைவு மற்றும் அளவீடுகள்
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திரண்ட தேய்மானம் அல்லது சொத்துக்களின் சேதஇழப்பு குறைந்து செல்லும் முறையில் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) கிரயம்
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயங்களில் அவற்றின் கொள்வனவுகள் மற்றும் பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்பட்ட நேர்க் கிரயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
அதிகார சபையின் செயலாற்றுகையை பேணுவதற்காக அல்லது விருத்தி செய்வதற்காக நிலையான சொத்துக்களின் சுவீகரிப்பு, நீடிப்பு அல்லது விருத்தி செய்வதற்கான பின்னைய செலவுகளானது மூலதன செலவாகக் கருதப்பட்டுள்ளது.

(இ) குறுங்கால இருப்பேடு
மூலதனமாக்க முடியாத குறுங்கால இருப்பு உருப்படிகள் நிதி செயலாற்றுகை கூற்றிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ் உருப்படியை நிர்வகிக்கும் நோக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, பௌதீக ரீதியில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஈ) தேய்வு
தேய்மானம் கணக்கிடப்படுவது, சொத்துக்களின் பயன்தறு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறை அடிப்படையிலாகும்.

| **சொத்துக்களின் வகுதி** | **தேய்வு வீதம்** |
|---|---|
| குத்தகைக் காணிகள் | குத்தகை கால அடிப்படை |
| கட்டிடங்கள் | 5% |
| பொறிகளும், உபகரணங்களும் | 10% |
| தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10% |
| கணனிகளும், பாகங்களும் | 25% |
| நூலக புத்தகங்கள் | 10% |
| மோட்டார் வண்டிகள் | 25% |
| அருவச் சொத்துக்கள் | 10% |

5.4 காசு மற்றும் காசுக்கு சமமானவை

கையிலுள்ள காசு, வங்கி வைப்புகள், குறுங்கால முதலீடுகள், காசு மற்றும் காசுக்கு சமமானவை என வரையறுக்க முடியும்.

கையிலுள்ள காசு மற்றும் வங்கி வைப்புகள், குறுகிய கால முதலீடுகள், இடமாற்றப்படும் காசு, காசுப் பாய்ச்சல் கூற்றின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவை எனக் கருதப்படும்.

## 6. பரிப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

ஐந்தொகையின் திகதியில் உள்ளவாறான அனைத்து பரிப்புக்களும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, தற்போது காணப்படுவதாக கருதப்படும் பரிப்புக்களுக்காக போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும், அவற்றின் பெறுமதியை சரியாக கணிப்பிட முடியவில்லை. கேள்விகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் அல்லது ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்தில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளானது நிதிக் கூற்றில் நடைமுறைப் பரிப்பாக கருதப்படுகின்றது. ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் நடைமுறை அல்லாத பரிப்பாக நிதிக் கூற்றில் கருதப்படுகின்றது.

6.1 பணிக்கொடை ஏற்பாடு

சகல பணியாளர்களுக்கும் ஆரம்ப ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கங் கொண்ட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் இலங்கை நிருவாக சேவையின் 16 ஆம் பிரிவிற்கு அமைவாக, பணியாளர் ஒருவர் தொடர்ந்து 5 வருட சேவையைப் பூர்த்தி செய்கையிலேயே இப்பரிப்பானது வலுவுடையதாகும்.

6.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகைகள் செலவுகளாக வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. அதிகார சபை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பணியாளர்களின் மொத்தச் சம்பளத்தில் 15% மற்றும் 3% இற்கு குறையாத தொகைகளை பங்களிப்புச் செய்கின்றது.

## 7. வருமானம்

அரசாங்கத்தினால் கிடைக்கப்பெற்ற மானியங்கள், மீண்டெழும் செலவாக பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் அதிகார சபையின் பல்வேறு நிதிசார் செயலாற்றுகை கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளது. மூலதனக் கொடையிலிருந்து, பிரதான புதுப்பித்தல்கள் மற்றும் மூலதன சொத்துக்களின் அதிகரிப்பிற்காக செலவு செய்யப்பட்ட தொகையானது நிதிசார் செயலாற்றுகை கூற்றுக்கு மூலதனமாக்கம் செய்யப்படாததோடு, சமமான தொகை மூலதன கொடையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

நிலையான சொத்துக்களில் இனங்காணப்பட்ட பரிப்புகள் மற்றும் தேய்வுகளுக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னர் மிகை / பற்றாக்குறை அல்லது செலவினை மிஞ்சிய வருமானம் ஏற்பட்டது.

அதிகார சபையை செயற்படுத்துகையிலும், அதன் மூலதன சொத்துக்களை வினைத்திறனாக பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் வருவாயில் வசூலிக்கப்படுகின்றன.

## 8. மூலதன பொறுப்புகள் மற்றும் உறுமுரிமை பரிப்புக்கள்

அனைத்து பொருள் ரீதியான மூலதனப் பொறுப்புகளையும், உறுமுரிமை பரிப்புக்களையும் கவனத்திற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 9. ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகளை இனங்கண்டு தேவையான சந்தர்ப்பங்களின் போது கணக்குகளில் அவசியமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

## 10. காசுப் பாய்ச்சல் கூற்று

பிற்போடப்பட்ட வருமானங்கள் குறைதல் / அதிகரித்தல் காசு சாராத அசைவுகளாக நிதிப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

My No: VOT/D/NAITA/1/20/04 Your No: Date: 26th May 2022

தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் விதிமுறைகளின் தேவைப்பாடு மீது 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

**1.1** முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------------

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2** முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-------------------------------------------------------------------------------

(அ) நிதிக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை 9 இன் படி ஐந்தொகை தினத்திற்கு பின்னரான நிகழ்வுகளுக்குப் பொருண்மையான தாக்கங்களை ஏற்படுத்தும் நிகழ்வுகள் தொடர்பாக நிதிசார் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக குறிப்பிடப்பட்டிருப்பினும், 2021 ஆம் ஆண்டு பெப்பிரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த 3 வழக்குகளுக்குரிய செலுத்தப்படவிருந்த மொத்த தொகையான ரூ. 12,942,552 இழப்பீடு தொடர்பாக மீளாய்வாண்டில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 7 இல் 47 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் உருப்படி ஒவ்வொரு 3 அல்லது 5 வருடங்களுக்கு ஒரு முறை மீள்கணிப்பீடு செய்ய வேண்டி இருப்பினும், நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள ரூ. 5,083,432,015 கிரயமான சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் உருப்படி மீள்கணிப்பீடு செய்யும் போது அச் சொத்து உள்ளடங்கும் சொத்துக்கான வகுப்பானது முழுமையாக மீள்கணிப்பீடு செய்ய வேண்டியிருப்பினும், மீளாய்வாண்டில் மோட்டார் வாகனங்கள் மீள்கணிப்பீடு செய்யும் போது அதிகார சபையில் காணப்படும் 15 மோட்டார் வண்டிகள் மீள்கணிப்பீட்டிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 7 இல் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தை வருடாந்தம் மதிப்பீடு செய்திராமை காரணமாக ரூ. 1,216,781,413 கிரயமான 07 வகையான சொத்துக்கள் முழுமையாக தேய்வுக்குட்பட்டிருந்தும் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், பயன்தரு ஆயுட் காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறு இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 3 இன் படி மீள் திருத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 8 இல் 22 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக நிறுவனத்திற்கு நடைமுறை கடன்பாடுகள் ஏற்படும் போது அக் கடன்பாடுகளின் பொருண்மையின் பிரகாரம் ஏற்படக்கூடிய உறுமுரிமை பொறுப்புகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும், மீளாய்வாண்டின் இறுதியில் நடைபெறும் 8 வழக்குகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2018 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து பணிகளை முடிவுறுத்தி தற்போது காணப்படும் ரூ. 1,261,908 பெறுமதியான கட்டிடங்கள் மூலதனமாக்கம் செய்வதற்கு பதிலாக நடைமுறை பணியாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்ததோடு, அக் கட்டிடங்களுக்கான தேய்மானச் செலவையும் இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் கணனி மென்பொருள் மற்றும் வலையமைப்பிற்காக செலவிடப்பட்ட ரூ. 7,950,619 தொகை அருவச் சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கம் செய்வதற்கு பதிலாக ரூ. 6,781,722 தொகையானது மீண்டெழும் செலவாகவும், ரூ. 1,168,897 தொகை நடைமுறை சொத்துக்களின் கீழ் முற்பணமாக பதியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் குறைபாடாக ரூ. 6,781,722 தொகையும், நடைமுறை சொத்துக்கள் ரூ. 1,168,897 தொகையினால் அதிகரிப்பையும், அருவச் சொத்துக்கள் ரூ. 7,950,619 தொகையினால் குறைவையும் நிதிக் கூற்றுக்கள் காட்டுகின்றது.

(ஏ) மீளாய்வாண்டில் சீனத் தூதரகத்தின் நன்கொடையாக பெறப்பட்டிருந்த ரூ. 5,316,000 பெறுமதியான கணனி மற்றும் அச்சு இயந்திரம் மற்றும் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் Deutsche Gesellschaft Fur International Zusammehar beit (GIZ) கருத்திட்டத்தினால் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு கிடைக்கப் பெற்ற ரூ. 6,475,926 பெறுமதியான சொத்துக்கள் சார்பான உபகரணங்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சனாதிபதி செயலகத்தில் மீளளிப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் "Multi Purpose Development Task Force Training Programme 100,000" எனும் கருத்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதியிலிருந்து செலவிடப்பட்ட ரூ. 12,470,721 தொகையானது மீளளிப்பு செய்யக்கூடிய வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் குறித்த செலவு மட்டும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் செலவாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் குறைபாடாகவும், நடைமுறை சொத்துக்கள் அதன் பொருண்மையில் முறையே அதிகமாகவும், குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்றது.

(ஒ) தேசிய பயிலுநர் மற்றும் தொழினுட்ப பயிற்சி அதிகாரசபையின் கீழ் காணப்பட்ட கிளிநொச்சி ஜேர்மன் தொழினுட்ப பயிற்சி நிறுவனம் அமைச்சரவை தீர்மானத்தின் படி 2020 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இரத்மலானை இலங்கை ஜேர்மன் தொழினுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பினும், அவ் ஒப்படைப்பிற்கு உரித்தான ரூ. 290,115,476 பெறுமதியான சொத்துக்களும், ரூ. 984,094 பெறுமதியான பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அந் நிறுவனத்திற்கு ஜேர்மனி நாட்டினால்

நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூ. 1,212,751,835 கிரயமான சொத்துக்களும், ரூ. 1,615,789,921 பெறுமதியான உரிமைகளும் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு, போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3** அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாயினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் இத்தால் கருதப்படுகின்றது. இவ் ஏனைய தகவல் குறித்து முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.
எனது அபிப்பிராயத்தின் படி, நிதிக் கூற்றுக்களில் ஏனைய தகவல்கள் உள்ளடங்காததோடு, நான் அது குறித்த உறுதிப்பாட்டை அல்லது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கான, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிக்கும் போது, நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் பொருண்மையாக, பொருத்தமற்றதாக இருக்கின்றனவா என ஆராய்ந்து பார்ப்பது எனது பொறுப்பாகும்.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கப்பெற்ற ஏனைய தகவல்களின் மீது, என்னால் செய்யப்பட்ட பணிகளின் அடிப்படையில், இங்கு ஏனைய தகவல்கள் பொருண்மையான முறையில் தவறாக காட்டப்பட்டுள்ளதாக என்னால் அவதானிக்கப்படுமாயின், அவ் விடயம் குறித்து என்னால் அறிக்கையிடப்படுதல் வேண்டும். இது குறித்து அறிக்கையிடுவதற்கு எனக்கு எதுவுமில்லை.

**1.4** நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத்தனம் வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்ள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை ..........................................................................................................................................

**2.1** 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு ஆணைக்குழு முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

2.1.3 இந்த அறிக்கையின் (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

**2.2** பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.12018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு சபையின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

2.2.22018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய

பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

| சட்டவிதிகள்/ பணிப்புரைகளுக்கான குறிப்பு | விபரம் |
|---|---|
| ............................................................... | ................ |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை<br>நிதி ஒழுங்குவிதி 760 | பொலன்னறுவை மாவட்ட அலுவலகத்தின் இருப்பு ஆவணத்திற்கு அமைய சேனபுர பயிற்சி நிலையத்திற்கான 13 வகையான பயிற்சி உபகரணங்கள் 108 உருப்படிகளில் குறைபாடாக காணப்பட்டமை கணக்காய்வின் போது வெளிப்பட்டது. |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை. | திறைசேரியின் அனுமதியின்றி தனது நிறுவனங்களுக்கு பணிக் குழுவினை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பணிக்குழுவிற்கு சம்பளங்களையும், கொடுப்பனவுகளையும் தீர்மானிப்பதை தவிர்க்குமாறு வலியுறுத்தி இருக்குமிடத்து, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திறைசேரியின் அனுமதியின்றி ஒப்பந்த அடிப்படையில் 47 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) 2017 ஆம் ஆண்டு ஏப்பிரல் 20 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை | (i) அதிசிறந்த செயலாற்றுகையின் அடிப்படையில் பதவியுயர்வு வழங்குதல் 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் படி இடைநிறுத்தப்பட்டிருக்கையில் முகாமைத்துவ மட்ட உத்தியோகத்தர்கள் 03 பேருக்கு பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. |

அப் பதவிகள் நடைமுறையாகாது என்பதை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆந் திகதி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதி வரை அப்பதவியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. கணக்காய்வினால் இவ் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டு 1½ வருட காலம் கடந்திருப்பினும் இது குறித்து எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(ii) பிரதிப் பணிப்பாளர் பதவிகள் நடைமுறையாகாது என குறிப்பிடப்பட்டு இருப்பினும், ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பதவியுயர்வு செய்தல் நடைமுறைக்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத 02 உத்தியோகத்தர்களுக்காக பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டிருந்ததோடு, உத்தியோகத்தர் ஒருவருக்கு 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கணக்காய்வு தினமான 2022 ஆந் திகதி மார்ச் மாதம் 15 ஆந் திகதி வரை பணிப்பாளர் (பயிற்சி) பதவிக்கு பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், உற்பத்திதிறன் மிக்கதாகவும் குறித்த காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகையை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என்றும்,

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் வர வேண்டிய மீதியில் முதலாம் ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளுக்கிடையில் மொத்தமாக ரூ. 38,289,653 தொகையான அறவிடமுடியாத பல்வேறு கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூ. 1,185,654 பெறுமதியான ஊழியர் கடன் உள்ளடங்கி இருந்ததோடு, இம் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் நீண்டகாலமாக நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2020 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் செலுத்த வேண்டியவைகளின் மீதியில் உள்ளடங்கியிருந்த 2 ஆம் வருடத்திலிருந்து 13 வருடங்களுக்கு இடையிலான காலப்பகுதிக்கான ரூ. 92,720,931 தொகையான செலுத்த வேண்டிய முற்பணங்கள், வைப்புக்களின் மீதிகள் மற்றும் பல்வேறு கடன்கொடுத்தோர்களை தீர்ப்பதற்கும் பொறுப்புகள் அல்லாத மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் ஆயுதக் களஞ்சியத்தின் இருப்பு ஆவணத்தில் 2011 ஆம் ஆண்டில் காணாமல் போயிருப்பினும், 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் வரை அது குறித்து முறையான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடு தற்போது களஞ்சியத்தில் காணப்படும் பொருட்கள்/ உபகரணங்களை சரியாக இனங்கண்டு முறையான அனுமதியின் கீழ் புதிய இருப்பு ஆவணமொன்றை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கட்டுபெத்த கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் பயிலுநர்களினால் உற்பத்தி செய்யப்படும் மரத்தளபாடங்களை விற்பனை செய்யும் நோக்கத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் ரூ. 18,847,771 தொகையினை செலவிட்டு நிறுவனத்தின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடம் மற்றும் ஒருகொடவத்தை மோட்டார் வாகன கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் ரூ. 9,172,400 தொகை செலவில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தியாகியிருந்த மாணவர் தங்குமிடமும், பணிக்குழு தங்குமிடமும் உபகரணங்களுடன் கணக்காய்வு தினமான 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதி வரையில் பயன்பாடின்றி வெறுமையாக இருந்தன.

(உ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கான பங்களிப்புத் தொகையை கணிப்பிடும் போது, வாழ்க்கைச் செலவு கொடுப்பனவைக் கவனத்தில் கொள்ளாத காரணத்தினால்

மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூ. 8,732,754 தொகையான மிகைக்கட்டணம் மற்றும் நிலுவை ஊழியர் சேமலாப நிதியில் ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையான ரூ. 58,908,280 தொகை குறித்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்படுவதற்கு பதிலாக சபையின் முன்னைய ஆண்டின் இலாபத்திலிருந்தும், மீளாய்வாண்டின் இலாபத்திலிருந்தும் கழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொலன்னறுவை மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டில் மூடப்பட்ட பயிற்சி நிலையமொன்றின் 297 பயிற்சி உபகரணங்கள் 7 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன.

(எ) ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான முழுநேர கற்கைநெறிகளுக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடாத்தப்பட்ட திறந்த போட்டி பரீட்சையில் பயிலுநர்களை தெரிவு செய்கையில் ஊழல் நடைபெற்ற காரணத்தினால் தகைமைகள் கொண்ட 30 பயிலுநர்கள் காணப்பட்ட போதும் தகைமைகளை பெற்றுக் கொள்ளாத 20 பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவ்விடயத்தைக் கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்டு 02 வருடங்கள் ஆகின்ற போதும் முறையற்ற விதத்தில் நடந்து கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆந் திகதி வரையில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கல்வி அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் இயங்கும் 13 வருடங்களுக்கு சான்றுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்வின் முதலாவது படிமுறையின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்காக ஆட்சேர்க்கப்பட்ட 186 மாணவர்களுக்காக ரூ. 2,170,814 தொகை செலவு செய்யப்பட்டு பயிற்சியை பூர்த்தி செய்து அதற்கான சான்றிதழ்கள் 20 மாணவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி